





# RTO கைது செய்யப்படுவாரா?

# தூத்துக்குடி களேபரம்....!

# சட்டம் -ஒழுங்கு பிரச்சனையில் போக்குவரத்து துறை!!!

போக்குவரத்து துறையில் BS IV, வாகன பதிவு எண் முறைகேடுகளில் நடந்த கோடி, கோடிக்கணக்கான ஊழல்கள் வெளிச்சத்திற்கு வந்ததில் இருந்து, தமிழகமெங்கும் உள்ள RTO அலுவலகங்களில் வாகன பதிவு எண் கூட்டுத்தொகை "8" -ல் முடியும் BS IV வாகனங்கள் சிறைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

இதில் பலரும் அய்யய்யோ... நாம் ஏமாற்றபட்டு விட்டோமோ என, தங்களிடம் உள்ள BS IV வாகனத்தை வந்த விலைக்கு விற்று விடவும் பலர் முயன்று வருகின்றனர். ஆனால் இந்த வாகனங்கள் இனி RC -யின் பெயர் மாற்றத்திற்காக வருகிற போது அதிகாரிகளால் உன்னிப்பாக கவனிக்கப்பட்டு , RTO - அதிகாரிகளாலே அந்த வாகனங்கள் சிறைப்பிடிக்கப்படலாம்.

அதே நேரத்தில் விவரம் அறியாதவர்கள் இந்த வாகனத்தை. வாங்கியபின் RTO அதிகாரிகளால் சிறை பிடிக்கப்படுகிறபோது பணத்தை இழந்தவர்கள், ஏமாற்றப்பட்ட நபரிடம் போய் தனது பணத்தை திரும்ப கொடு என்று கேட்கிற நிலைகளும், அவரோ நான் கொடுத்த காரை கொடு பணத்தை திரும்ப தருகிறேன் என கூறுவதோ போன்ற நிகழ்வுகளால், சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் ஏற்படவும் அதிக வாய்ப்புகளை உருவாக்கி விட்டது .

இந்த விவகாரம் ,ATC மணக்குமார் மற்றும் DTC நெல்லையப்பன், தேனி RTO - PA- முரளிதரனின் இரண்டாம் மனைவியும், மற்றொரு அரசு அதிகாரியின் மனைவியுமான வளசரவாக்கம் RTO அலுவலக சூப்பிரண்டு ராஜேஸ்வரியாலும் சீர்கேடாக்கப் பட்டுவிட்டது .(இது பற்றிய செய்தி விரைவில்)

எனவே இது போன்ற பிரச்சனைகளில் பொதுமக்கள் நலன்கருதி ஒரு விழிப்புணர்வுக்காக, BS IV - ல் நடந்த முறைகேடுகளை, ஊடகங்களின் முன் போக்குவரத்து ஆணையரால் அறிவிக்கப்பட்டு, பொதுமக்களிடமும், SECOND HAND வாகன விற்பனையாளர்களிடமும், BS IV வாகனமுறைகேடுகளை பற்றி எடுத்துரைத்து உஷார் படுத்தப்படவேண்டும்.

இல்லையேல், இதனால் சட்டம்- ஒழுங்கு அந்தந்த பகுதியில் சீர்கெடும் நிலைகள் ஏற்படும். ( எனவே SECOND HAND வாகன விற்பனையாளர்கள் ஒருவொருக்கொருவர் இச்செய்தியை Forward செய்துகொள்வதோடு, என்னை follow up செய்தும் கொள்ளவும். இது பற்றிய தொடர் செய்திகளும், உங்கள் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான வழிமுறைகளும் என்னால் பதிவுக்கு கொண்டு வரப்படும்.

எனவே உங்களது தேவைக்கான RTO அலுவலக கோரிக்கைகளையும் மற்றும் சமூகநல செய்திகளையும் எனது கவனத்திற்கு எடுத்து வரும்பட்சத்தில், அதற்கான தீர்வுகள் உரிய வழிகள் மூலம் என்னால் தீர்த்து வைக்கப்படும். )

மேலும்,ஏற்கனவே RTO அதிகாரிகளின் ஊழல்களால் மட்டுமல்லாது, அவர்களது அலட்சிய பணிகளாலும்,அரசு ஊழியர் அல்லாத மற்றொருவரை அலுவலக கணினியில் அமர்த்தி பணிபுரிய அனுமதிப்பதும், அதிகாரிகளின் லாகின் PASSWORD களை புரோக்கர்களிடம் நம்பி கொடுப்பதும்தான், இந்த BS IV -ன் ஊழலுக்கு முக்கிய காரணமாகும்.

மேலும் மேற்கண்ட வகையில் செய்த முறைகேடுகளால் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள், மற்றொருவர் கைக்கு பெயர் மாற்றம் செய்யப்படுகிற போது, RTO அதிகாரிகளால் பெறப்பட வேண்டிய ஆவணங்களின் உண்மைத்
தன்மைகளையும், மற்றும் அதற்குரிய ஆவணங்களையும் பெறாமல், அதிகாரிகளின் சுயநலத்திற்காக லஞ்சம் பெறப்பட்டு, வாகனப் பதிவை செய்து உள்ளார்கள் என்பதும் இந்த சம்பவம் மூலம் உணர்த்தப்படுகிறது.

இதற்கு மாரியப்பன் என்ற ஒரு பொது ஜனத்திற்கும், ஊழல் சக்கரவர்த்தியான தூத்துக்குடி RTO வினாயகத்திற்கும் இடையில் நடைபெற்ற திருவிளையாடலில் இருந்து, இந்த தில்லாலங்கடி ஊழலை விவரிக்கிறோம்.

மூன்றாவது முறையாக,பெயர் மாற்றம் செய்யப்பட்ட BS IV-,வாகனத்தின் சொந்தக்காரர் மாரியப்பன். அவரது வாகனம் RTO வினால் பறிமுதல் செய்ப்பட்டிருக்கிறது.

அதே நேரத்தில் மாரியப்பனின் பெயர் மாற்றத்திற்கு ( TO ) செய்த தவறுகள் எல்லாம் RTO வினாயகத்தின் மேற்பார்வையில் நடந்த ஊழல் பணி மற்றும் அலட்சிய பணிகளே காரணமாகும்.

மாரியப்பனுக்கு ஏற்பட்ட இந்த வாகன இழப்புகளுக்கும் மற்றும் பண இழப்புகளுக்கும் RTO -ன் ஊழல் பணியே காரணம் என்கிற போது, மாரியப்பனின் வாகனத்தை "சீஸ்" செய்து, அவருக்கு நஷ்டத்தை கொடுத்து தண்டித்திருப்பதும் ஒரு நியாயமான செயல்களே அல்ல.

அது மட்டுமல்லாது அந்த வாகனம் அவருக்குரியது என்பதால், அந்த பொருளுக்கு சொந்தக்காரர் அதாவது அந்த வாகனத்தின் உரிமையாளரான அவரே அந்த வாகனத்தை பிரித்தெடுத்து, உதிரிபாகங்களாக சந்தையில் விற்பதற்கோ, பழை இரும்பு கடையில் விற்பதற்கும் அதனை தனதாக்கி கொள்ள மாரியப்பன் போன்றோருக்கு உரிமை உண்டு.

அவரது RC மற்றும் இன்சூரன்ஸை மட்டும் முடக்கலாமே தவிர, வாகனத்தை அவரிடம் இருந்து பறிப்பது என்பது RTO - வின் அதிகார துஷ்பிரயோக பணிகளாகும்.

எனவே, இனியும் இது போன்ற நிகழ்வுகள் தொடரக்கூடாது என்பதற்கும், அதிமுக ஆட்சியில் நடந்த இந்த ஊழலை மூடி மறைக்காமல், இந்த முறைகேடான தவறுகளை எடுத்துரைத்து SECOND HAND வாகனம் வாங்கும் பொதுமக்களை உஷார்படுத்த வேண்டும் என்பதே இந்த கட்டுரையின் சராம்சமாகும்.

மேலும், சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு இதனையே ஒரு புகாராகவும் பணிந்து தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோல் ,இந்த கட்டுரையில் இடம் பெற்ற பாதிக்கப்பட்ட மாரியப்பனின் இழப்புக்கு காரணமான வினாயகம் கைது செய்யப்பட வேண்டும், அவர் உடனடியாக பணியிடை நீக்கமும் செய்யப்பட வேண்டும். RTO-வினாயகத்தின் உத்தரவுகளால் ஏமாற்றப்பட்ட மூன்றாவது உரிமையாளராக பெயர் மாற்றம் செய்யப்பட்ட, இந்த மாரியப்பனின் வாகனத்திற்குரிய நஷ்டஈடுகளையும், RTO வினாயகத்தாலே வழங்கப்பட்டே ஆக வேண்டும்,என்ற கோரிக்கையை முன் வைக்கிறோம்.

ஏனெனில் RTO -ன் பணியில் ஊழல் இல்லாமல் இருந்திருந்தால், மாரியப்பனின் பெயருக்கு பதிவேற்றம் செய்யப்படுகிறபோதே, இந்த முறை கேடை RTO - அதிகாரியால் தடுத்திருக்கும் முடியும். மேற்கண்ட திருடனையும் கையும் களவுமாக பிடித்து, எப்போதோ இந்த முறைகேடுகளை வெளிச்சத்திற்கும் கொண்டு வந்திருக்க முடியும்.

இவையெல்லாம் நடக்காமல் போனதற்கு காரணம், இந்த முறைகேடிற்கு RTO வினாயகத்தின் பங்களிப்புகள் அதிகமாய் போனதுதான் காரணமாகும்..

அதே நேரத்தில் நல்ல அதிரடியான அதிகாரிகளான பலரும், இந்த ஊழலுக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தாலும், பல போக்குவரத்து அதிகாரிகள் தங்களது அலுவலக செலவிலோ அல்லது சில சமூக சேவர்களது அறிவிப்பு பேனர்கள் மூலமாவதோ போக்குவரத்து அலுவலக வாசலில் பொதுமக்கள் பார்வையில் படும்படிய,BS IV-ன் முறைகேடு குறித்து ஒரு உஷார் எச்சரிக்கையினை அறிவிக்கிறபட்சத்தில், இனியாவது தொடர்கிற SECOND HAND விற்பனையில் ஏற்படும் ஏமாற்றங்கள் தடுக்கப்படும்.

அதேநேரத்தில் பணத்தை இழந்தவரால் சட்டம் ஒழுங்கு சீர்கெடும் என்பதை அறிந்து, அரசு உரிய நடவடிக்கைக்கு உத்திரவிட வேண்டும். இத்தோடு இணைப்பில் உள்ள LIST -ல் உள்ள, (பார்க்க:. Tirunelveli Auction Date 08.10.2022) இந்த வாகனங்கள், கடந்த 08-10-2022 - ல் திருநெல்வேலி TO நாகர்கோவில் மெயின்ரோடு, திருநெல்வேலி சரகத்திற்கு உட்பட்ட, பொன்னாகுடி என்ற பகுதியில் செயல்படும் ஸ்ரீராம் ஆட்டோ மால் - நிறுவனத்தினர் மூலம் ஏலம் விடப்பட்ட வாகனங்களின் பட்டியல் ஆகும்.

இந்த செய்தியின் விபரத்திற்குள் செல்லும்முன், ஒரு சின்ன ப்ளாஷ்பேக்-கை முதலில் பார்த்து விடுவோம்.

கடந்த 8-10-2022-ல் ஏலம்விடப்பட்ட இந்த பட்டியலுக்கு முன்புவரை, ஸ்ரீராம் ஆட்டோமால் நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டு வந்த (Auction list) அறிக்கைகளில், அதாவது ஏல பட்டியலில், ஏலத்திற்கு வரும் அந்தந்த வாகனத்தின் பதிவு எண்களும் வெளியிடப்பட்டு வந்தது.

ஆனால் BS IV-ல் நடந்த முறைகேடான செய்திகள் குறித்து, நாம் தொடர்ந்து வெளியிட்டு வரும் பதிவுகளை அறிந்த மேற்கண்ட நிறுவனமும், இன்னும் சிலரும் BS IV-வாகனத்தின் பதிவு எண்ணின் கூட்டுத்தொகை" 8" -ல் முடியும், வாகன எண்களை மறைத்து, அவரவர்கள் விற்பனை செய்யும் சூழ்நிலைக்கு ஆளாகி வரும் நிலைகளை, நமது நிருபர்களால் நம் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டது.

எனவே இதுகுறித்து நாம் விசாரணையில் இறங்கினோம்.

மேற்கண்ட ஸ்ரீராம் ஆட்டோ மால் நிறுவனத்தினரால் "சீஸ்" செய்யப்பட்ட வாகனங்கள் என்று கூறி, கடந்த 8.10.2022-ல் ஏலத்திற்கு ஒரு பட்டியலை வெளி கொண்டு வந்ததுள்ளனர், அதே நேரத்தில், அந்த வாகன பதிவு எண்கள் அறிக்கையில் (பட்டியலில்) மறைத்து ஏதோ முறைகேடுகளை செய்துள்ளதாக கூறி பல தரப்பிலும் நமது கவனத்திற்கு அந்த ஏல பட்டியலை அனுப்பி வைத்து சந்தேகத்தை வலுப்படுத்தி வந்தனர். ( பார்க்க - பட்டியல்)

எனவே சம்பந்தப்பட்ட போக்குவரத்து அதிகாரிகள் மற்றும் குற்றப்பிரிவு போலிசாரும் இணைந்து, கடந்த ஐந்து வருடங்களாக ஸ்ரீராம் ஆட்டோ மால் நிறுவனத்தினரால் ஏலத்திற்கு விடப்பட்ட வாகனங்கள் என்னென்ன? அந்த வாகனத்தின் பதிவு எண்கள் என்னென்ன?, மேலும் "சீஸ்" செய்யப்பட்ட அந்த வாகனங்களுக்கு எல்லாம், இவர்களால் கடனாக வழங்கப்பட்ட நிதிகளுக்கு, அந்தந்த வாகன உரிமையாளர்களிடம்,இந்த நிதி நிறுவனம் பெற்ற உத்தரவாதத்திற்கான ஆவணங்கள் என்னென்ன? இந்த ஆட்டோமால் நிறுவனத்தினரால் "சீஸ்" செய்யப்பட்ட BS IV-ன் வாகனத்தின் உரிமையாளரிடம் இருந்து எந்த வங்கிகணக்கின் காசோலைகள் பெறப்பட்டது? வாகனம் "சீஸ்" செய்யப்படுகிற போது நிலுவையில் இருந்த தொகைகள் எவ்வளவு? எந்த முகவரியில் "சீஸ்" செய்யப்பட்டது? எத்தனை முறை, எந்தெந்த முகவரிக்கு கடனை கட்ட சொல்லி ஸ்ரீராம் நிறுவனம் யார் யாருக்கு எல்லாம் கடிதம் அனுப்பியது? அந்த கடிதம் அனுப்பிய முகவரி என்ன? அவரது வங்கி கணக்கில் இருந்து, இந்த BS IV, வாகனத்திற்கான வகையில் எத்தனை காசோலைகள் PASS செய்யப்பட்டுள்ளது?எத்தனை காசோலைகள், வங்கியின் கணக்கில் இருந்து பணமில்லாமல் திரும்பியது? அந்த வங்கி கணக்கு யாரது பெயரில் செயல்பட்டது? அதன் Transection என்ன?அந்த வங்கி கணக்கில் உள்ள புகைப்படமும், அவரது வாகனத்திற்குரிய ஆவணங்கள் மற்றும் ஓட்டுனர் உரிமத்திற்கான உள்ள ஆவணங்கள் அனைத்தும் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

"சீஸ்" செய்யப்பட்ட BS IV வாங்கிய வாகனத்தாரின் வங்கி கணக்கு துவங்க, அந்த வங்கிக்கு இவரை அறிமுகபடுத்தி உத்தரவாத கையெழுத்திட்டது யார்? அவருக்கும் இவருக்கும் என்ன தொடர்பு? இந்த BS IV வாகனத்திற்கு கடன் வழங்க ஸ்ரீராம் ஆட்டோ மால் நிறுவனத்தினால், அந்த வாகன உரிமையாளரிடம் ஆதாரமாக பெற்ற ஆவணங்கள் என்னென்ன? வாகன பெயர் மாற்றத்திற்காக தூத்துக்குடி RTO - க்கு கொடுக்கப்பட வேண்டிய ஆவணங்கள் எல்லாம், ஸ்ரீராம் ஆட்டோ மால் நிறுவனத்தினரால் கொடுக்கப்பட்டதா இல்லையா? அப்படி கொடுக்கப்பட்டிருந்தால்

அந்த ஆவணங்களுக்கு தூத்துக்குடி அதிகாரிகளால் பெறப்பட்ட மனுவுக்கு குறியீட்டு எண்கள் என்ன? அவைகள் தரப்படவில்லை என்றால், ஸ்ரீராம் ஆட்டோமால் நிறுவனத்தினரால் தூத்துக்குடி RTO-க்கு எதனால் தரப்படவில்லை? என்று பல்வேறு கேள்விகளையும் குடைந்து எழுப்புகிற பட்சத்தில் மொத்த செயின் லிங்க்களும் வரிசையாக சிக்க கூடும்.

இவைகள் சாதாரண முறைகேடுகள் அல்ல. கோடி கோடி கோடிகணக்கான வகையில் தமிழகமெங்கும் மட்டுமல்ல இந்தியா முழுக்க நடந்துள்ள முறைகேடுகளாகும்.

எனவே வருமானவரித்துறையினர், அமலாக்கத்துறையினர், சிபிஐ.போன்ற உயர்மட்ட அதிகாரிகள் இதனை கையில் எடுத்து விசாரித்தால் மட்டும்தான் இதில் தலையிட்டுள்ள பெரிய தலைகள் எல்லாம் சிக்க கூடும்.இல்லையேல் கீழ்நிலை ஊழியர்கள் மட்டும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டு கண்துடைப்புக்களை செய்து மிகப் பெரும் இந்த ஊழல்கள் மறைக்கப்பட்டு விடும்.

இந்த கட்டுரையின் பதிவின் போது நமக்கு கிடைத்த மற்றொரு செய்தியும், தற்போது வளசரவாக்கம் PA கைது செய்யப்பட போவதாகவும் செய்திகள் வந்துள்ளது. நாம் சொன்ன மாதிரி பெரும் முதலைகளை தப்பவிடுவதற்கு, மண்புழுவை மாட்டிவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருதாகவே தெரியவருகிறது.

மேலும், இந்த ஸ்ரீராம் நிறுவனத்தின் லெட்டர் பேடி- ல் கூட முழு முகவரிகளும், தொலைபேசி எண்கள், mail ID கள், ஸ்ரீராம் நிறுவனத்தின் பதிவு எண்கள் இல்லாமல் இருப்பதையும் பாரீர்.(பார்க்க ஸ்ரீராம் கடிதம்), இப்படி உரிய ஆவணங்கள் எதுவும் இல்லாமல், தூத்துக்குடி RTO -ல் எப்படி வாகன பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்பதையும், அந்த RTO -வின் முறைகேடுகளையும் உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து விசாரித்தால், RTO வினயாகத்தின் "சீட்டிங்"களும் இந்த கோடிக்கணக்கான முறைகேடுகளுக்கு யார், யார் பின்னனியில் இருந்து இயங்கியுள்ளனர் என்பதும் வினாயகத்தின் கைதின் மூலம் வெளிச்சத்திற்கு வரும் என்கின்றனர்.

பிப்ரவரி 2022-ல், இதே நிறுவனத்தினரால்,இது போன்று வெளியிடப்பட்ட ஒரு ஏல அறிக்கையின் விபரம் அறிந்து, நாங்குனேரியில் டிராவல்ஸ் நடத்தும் தனது உறவினர் ஒருவர் மூலம் தகவல் அறிந்த, தூத்துக்குடியை சேர்ந்த ஒரு தனியார் இன்சூரன்ஸில் பணிபுரியும் இந்த மாரியப்பன் என்பவர், திருநெல்வேலி-பொன்னாகுடியில் செயல்படும், ஸ்ரீராம் ஆட்டோ மால் நிறுவனத்தில் BS IV-ன் வாகனமான TN 99 J 3464 என்ற வாகன பதிவு எண் கொண்ட வாகனத்தை இரண்டரை லட்ச ருபாய்க்கு விலைக்கு வாங்குகிறார்.

மேலும் அந்த வாகனத்தை தூத்துக்குடி RTO-வின் புரோக்கரான யுவராஜ் மூலம், RTO வினாயகம் கவனத்திற்கு நேரிடையாக மாரியப்பனால் கொடுக்கப்பட்டு அவரது பெயருக்கு பெயர் மாற்றம் அதாவது THIRD HAND OWNER - ராக பெயர் மாற்றமும் செய்யப்படுகிறது. (பார்க்க : ஆவணங்கள்)

இந்த நிலையில் தற்போது, BS IV நடந்த முறைகேடுகளான வாகன பதிவுகள் நடந்த கோடி கோடிக்கணக்கான ஊழல்கள் வெளிச்சத்திற்கு வந்த நிலையில், அதிரடியான போக்குவரத்து ஆணையரால் BS IV வாகனத்தின் கூட்டுத்தொகை "8" -ல் முடியும் பதிவு எண்கள் கொண்ட வாகனங்களை சிறைப்பிடிக்கவும், அந்த வாகனங்கள் Black செய்யப்பட உத்தரவுகளும் இடப்பட்டன.

இந்த வகையில், தூத்துக்குடி மாநகரில் கடந்த எட்டு மாதங்களாக பயன்படுத்தி வந்த, மாரியப்பன் என்பவரது கைப்பேசிக்கு அழைத்த RTO வினாயகம், "தங்களது வாகனத்தின் பதிவு ஆவணத்தில் ஒரு சிறு விசாரணை உள்ளது, உடனே வாருங்கள் வந்தவுடன் உடனே திரும்பி போய்விடலாம் "என சூசகமாக வரவழைத்து, வாகனத்தை சிறை பிடித்து விட்டு, அதற்கான ஆவணங்களையும் பெற்று விட்டு அவரை நடைபயணமாக அனுப்பி விடுகிறார் RTO வினாயகம்.

இது பற்றி RTO வினாயகம், மாரியப்பனிடம் தெரிவித்திருப்பது...

"இந்த BS IV வாகனம் Pollution பிரச்சனை காரணமாக உச்சநீதிமன்ற நீதியரசர்களாலும், மற்றும் மத்திய அரசாலும் தடை செய்யப்பட்ட வாகனமாகும். எனவே, இதனை பொதுச்சாலையில் இயக்க அனுமதிக்க முடியாது, இது எங்கள் போக்குவரத்து ஆணையரின் உத்தரவு"- என கூறி வாகனத்தை சிறை பிடித்து விடுகிறார் RTO வினாயகம். (உச்சநீதிமன்றமும், மத்திய அரசும் ஏற்கனவே இதற்கு தடை அறிவித்திருக்கும் நிலையில் அந்த வாகனத்தை பெயர் மாற்றம் செய்கிற போது RTO-க்கு இது தெரியாமல் போனது எப்படி?, ஆணையரின் உத்தரவுக்கு பிறகு தான் அந்த வாகனத்தை RTO "சீஸ்" செய்ய கண்விழிப்பாரோ? எனவே RTO மீது நீதிமன்ற அவமதிப்பினை சமூக ஆர்வலர்கள் தொடங்கலாமே.!!!)

ஒவ்வொரு நடுத்தர வர்க்கத்தினருக்கும் கார் ஒன்று வாங்குவது என்பது, லட்சிய கனவாக இருக்கும். அதுவும் Second Hand Car ஒன்றை முதன்முதலில், ஒருவர் வாங்குகிறார் என்கிற போது, அந்த காரை வாங்குவதற்கு அந்த நடுத்தர மக்கள் படும் பாடு சொல்லி மாளாது.

குறிப்பாக அந்த வாகனத்தின் முதல் சவாரியின் நினைவலைகள், முதல் அன்பான முத்ததிற்கு (Love) ஈடானது, எக்காலத்திலும் மறக்க முடியாதது. இப்படியொரு நினைவலையில் இருக்கும் ஒருவரது கார் திடீரென பறிமுதல் செய்து, அந்த பயண உறவுகளை அறுத்தெடுக்கிற போது, அந்தந்த குடும்பங்களில் ஏற்படும் மனவருத்தங்கள் மற்றும் அவரவர் குடும்பங்களில் ஏற்படும் பிரச்சனைகள் எல்லாம் பரிதாபத்திற்குரியது, என்பது ஒரு தனி டராக் என்றாலும், இந்த மனவலியை கொடுத்த RTO அதிகாரிக்கு போக்குவரத்து துறையின் உயர் அதிகாரிகளும், காவல் துறையினரும் தாமாகவே முன்வந்து தண்டனைகளை வழங்க வேண்டும்.

அவை இல்லாதபட்சத்தில், எம்மை போன்ற ஊடகத்தினரால் அளிக்கப்படும் புகார்கள் மீதாவது உரிய நடவடிக்கை எடுத்து RTO வினாயகம் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும்.
அதாவது மேற்கண்ட BS IV வாகனத்தின் FIRST OWNER பெயருக்கு, ஏதோ BACKLOG - மூலம் ஏமாற்றி முறைகேடுகளை அரங்கேற்றி விட்டனர். அதனை கண்டுபிடிக்க முடியவில்லை என அதிகாரிகளில் தெரிவித்த பட்சத்தில் அதனை ஏற்றுக்கொண்டாலும் கூட, இரண்டாவது OWNER - ராக அருண் என்ற பெயரில் மாறுகிற போது எப்படி இந்த RTO அதிகாரிகளால் உரிய ஆவணங்களை பெறாமல் அருண் பெயருக்கு எப்படி மாற்றம் செய்தார்கள்? சரி அதையும் கூட, ஒரு FAKE ஆவணங்கள் மூலம் பண்ணியிருந்தாலும், மூன்றாவது கைக்கு மாறுகிற போது, அந்த வாகனத்தை வாங்கிய மாரியப்பன் நேரிடையாக தனக்குரிய ஆவணங்களோடு, RTO வினாயகத்தின் புரோக்கரான யுவராஜ் மூலம் வினாயகத்தை நேரில் சந்தித்து, கடந்த 10-02-2022-ல் பேப்பரை (ஆவணங்கள்) அளித்துள்ளார் மாரியப்பன்.

14-02-2022-ல் மாரியப்பன் பெயருக்கு அந்த வாகனம் பெயர் மாற்றம் செய்யப்படுகிறது.(பார்க்க ஆவணங்கள்). பெயர் மாற்றம் செய்யப்படுவதற்கான உரிய ஆவணங்களான ஸ்ரீராம் ஆட்டோ மால் நிறுவனத்தின் NOC மற்றும் FINANCE CANCELLATION CERTIFICATE, FORAM 35 இரண்டு எண்ணங்கள், மற்றும் ஸ்ரீராம் ஆட்டோ மால் நிறுவனத்தில் இருந்து RTO அலுவலகத்திற்கு வரவேண்டிய MAIL இவைகள் அனைத்தும் பெறாமல் RTO வினாயகத்தால் எப்படி மாரியப்பன் பெயருக்கு தூத்துக்குடி RTO - ல் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

அப்படியிருக்கிற பட்சத்தில் இதில் முழுக்க முழுக்க RTO வினாயகத்தால் நடத்தப் பட்ட முறைகேடுகளும், அவரது லஞ்ச லாவண்யங்களாலும், இந்த வாகனத்திற்கான பெயர் மாற்றங்கள் RTO வினாயகத்தால் நடைபெற்றுள்ளது, என்பது தெள்ளத்தெளிவாக தெரிய வருகிறது.

எனவே உள்துறைச் செயலரும், போக்குவரத்து ஆணையரும் இதில் சம்பந்தப்பட்ட RTO வினாயகம் மீது குற்ற நடவடிக்கையினை எடுக்க உத்திரவிடவும், மற்றும் துறைரீதியான கடும் நடவடிக்கைகளையும் எடுக்க பணிந்து கோருகிறோம்.

இதில் கவனிக்கப்பட வேண்டியவை என்னெவென்றால், இந்த முறைகேடு பிறந்த முதல் இடம் வளசரவாக்கம் RTO அலுவலகம், இந்த வாகனம் முதலில் சந்திரசேகரன் என்ற பெயரில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

அடுத்து, இதே வாகனம் இரண்டாம் நபரான அருண் பெயருக்கு மாற்றப்பட்டு SECOND HANDED ஆன அருண் பெயரில் இருந்து, மாரியப்பன் பெயருக்கு TO ஆகிற போது, அதாவது மாரியப்பன் பெயருக்கு அந்த வாகனம் மாறுகிற போதும், அருண் பெயருக்கும் மாறியபோதும் கவனிக்க வேண்டிய RTO பணிகள் எல்லாம் எப்படி, எதற்காக கவனிக்காமல் போனது? எனவே RTO வினாயகத்தின் லஞ்ச பணிகளால் மட்டும்தான், இந்த முறைகேடுகள் நடந்துள்ளது என்பதை சூடம் ஏற்றியும், ஏற்றாமலும் RTO வினாயகத்தின் தலையில் அடித்து சத்தியம் கூட பண்ணலாம்..!!!!!!

( இப்படியொரு ஊழல் அதிகாரியின் உதட்டில் ஆய்வாளராக பணிபுரிந்த போது அடிக்கடி ஓம் சிவாய நமக, என சிவபுராணம் பாடுவது என தொடந்த நிலையில் தற்போது வார்த்தைக்கு, வார்த்தை இறைவா, இறைவா, என இவரது பதவி உயர்வுக்கு ஏற்ப ஆண்டவனுக்கும் இவரால் பதவி உயர்வு கொடுக்கப்பட்டு எப்போதும் இறைவனை அழைத்துக் கொண்டே பாவக்கணக்கை ஏற்றி வருகிறார். இனி இவரது அந்த இறைவா என புகழ்பாடுவது கூட அந்த சிவபெருமானுக்கே அடுக்காது என்பது தான் உண்மை)

மேலும், ஸ்ரீராம் ஆட்டோ மால் நிறுவனத்தினரால் "சீஸ்" செய்யப்பட்ட வாகனம் மாரியப்பனால் ஏலத்தில் எடுத்திருந்த நிலையில் அந்த வாகனம் மாரியப்பன் பெயருக்கு தூத்துக்குடி RTO -ல் வினாயகத்தால் மாற்றப்படுகிறது. இந்த பெயர் மாற்றம் நடைபெறுகிறபோது ஸ்ரீராம் நிறுவனத்தினரால் Form 35 இரண்டு எண்ணங்கள் RTO வினாயகத்திற்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும். கூடவே ஸ்ரீராம் நிறுவனத்தின் NOC யும் வழங்கப்பட வேண்டும்.

அதே போல் ஸ்ரீராம் நிறுவனத்தில் இருந்து தூத்துக்குடி RTO அலுவலகத்திற்கு Financial cancel certificate ஆவணத்தையும், ஸ்ரீராம் நிறுவனத்தின் மின்னஞ்சலில் இருந்து RTO வினாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். இந்த முக்கிய ஆவணங்கள் அனைத்தையும் RTO அலுவலக தபாலில் பெறப்பிட்ட பின்பு அதற்கான நம்பர் RTO அதிகாரிகளால் பதிவிடப்பட்டு (குறியீட்டு எண்) அலுவலக செக்க்ஷன்கள் பணியாளர்களுக்குரிய ஒவ்வொருவரின் பார்வைக்கு கொண்டு வரப்பட்டு, அவரவர்களின் உரிய ஆய்வுகளை செய்த பின் இறுதியாக சூப்பிரண்டினால் பணிகள் முடிக்கப்பட்டு RTO மற்றும் PA-வின் பார்வைக்கு சென்று சம்பந்தப்பட்டவர்களின் கைக்கு செல்லும்.

ஆனால் இந்த முறைகள் எதனையுமே கடைபிடிக்காமல், RTO வினயாகமே நேரிடையாக லஞ்சத்தை பெற்று அப்ரூவல் செய்துவிட்டு கோடி கோடியாய் கொள்ளையடித்துள்ளார். அதற்கு ஒரு சின்ன ஆதாரமும் இதுதான். ஆம் மாரியப்பன் பெயருக்கு மாறிய இந்த RC அலுவலகத்தில் உள்ள சம்பந்தப்பட்ட சூப்பிரண்டுகள் மற்றும் அஸிஸ்டெண்ட்கள் கவனத்திற்கு செல்லாமல் RTO வினயாகம் ஒருவரால் மட்டுமே ஆய்வு செய்யப்பட்டு அப்ரூவல் செய்யப்பட்டு முறைகேடான பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

இவை அத்தனையும் RTO வினாயகத்தின் லாகினிற்குள் சென்றால், மாரியப்பனின் வாகனத்திற்கு ஆய்வு செய்ததில் இருந்து அப்ரூவல் கொடுத்தது வரை RTO வினாயகத்தினால் மட்டுமே நடத்தப்பட்டிருப்பதை அறியமுடியும், என்கின்றனர் சிலர்.

மேலும் பெயர் மாற்றத்திற்காக ஸ்ரீராம் ஆட்டோ மால், மற்றும் மாரியப்பன் அவர்களால் கொடுக்கப்பட்ட ஆவணங்கள் என்னென்ன என்பதை அலுவலகத் தபால் குறியீட்டு எண்ணில் பெற்றார்களா? அந்த குறியீட்டு எண்ணில் பதிவான ஆவணங்களில் என்னென்ன அலுவலக கோப்புகளை ஆய்வு செய்யும்பட்சத்தில் RTOவினாயகத்தின் முறைகேடுகளை அறிய முடியும். மேலும் நேரிடையாக RTO -மூலம் மட்டுமே பதிவேற்றப்பட்ட இந்த விவரங்களை எல்லாம் ஆழமாய் ஆய்வுக்கு எடுக்கும்பட்சத்தில் RTO -ன் முறைகேடான பணிகள் அனைத்தும் வெட்ட வெளிச்சமாக பிரகாசமாய் தெரியவரும்

மேலும்,இப்படி அலுவலக பணியாளர்கள் செய்யவேண்டிய பணிகள் எல்லாம் தபால் முலம் பெறப்பட்டு, அதற்கான குறியிட்டு எண்கள் எதுவும் பதிவு செய்யப்படாமல், PA-வின் தலையீடுகளே இல்லாதபடி,அதாவது முறையான வழிகளில் எந்த ஒரு மனுக்களும் பெறப்படாமல், RTO -வின் புரோக்கர்கள் மூலம் வினாயகமே நேரிடையாக பெற்று முறைகேடுகளை செய்து வருகிறார் என்பது ஆணையரின் நேரடி ஆய்வுகளால் மட்டுமே அறியமுடியும்.

அதே போல் ஏதோ ஒரு, வழக்கிற்கு நீதிமன்றத்திற்கோ அல்லது ஆணையரின் ஆய்வுக்கோ தூத்துக்குடி RTO அலுவலகத்தில் இருந்து உரிய நகல் தேவைப்படுகிற பட்சத்தில், தூத்துக்குடி RTO அலுவலகத்தை பொறுத்தவரை எதுவும் கிடைக்கப் போவதில்லை.

காரணம் அனைத்து மனுக்களையும் புரோக்கர் மூலம் வினாயகமே பெற்று யாரது பார்வைக்கும் செல்லாமல், புரோக்கர்கள் மூலமே வினாயகமே செய்துமுடித்துவிடுவதால், தேவைக்குரிய ஆவணங்கள் செக்ஷனில் தேடினாலும், கிடைக்கப் போவதில்லை. கடைசியில் இந்த பணிகள் அனைத்தும் அலுவலக சூப்பிரண்டுகளுக்கு உரியது என கூறி, அப்பாவியான கடைநிலை ஊழியர்களான அஸிஸ்டெண்ட்கள், சூப்பிரண்டுகளை பலியாக்குவதற்கான வழிகளை தான் இதுவரை RTOவினாயகம் செய்துள்ளார்.

இவை அனைத்தையும் அறிந்த அலுவலக பணியாளர்கள் தங்களது பணிகளுக்குத்தான் பாதிப்பு உள்ளது என்பதை கூட அறியாமல், தனது மேலதிகாரியிடம் எப்படி கேள்வி எழுப்பது என புரியாமல் அங்குள்ள அனைத்து பணியாளர்களும் ஒருவித பயத்திலும் மனப்புழுக்கத்திலும் உள்ளனர். (இவர்களை ஆணையர்தான் காப்பாற்ற வேண்டும்)

அதே போல் மாரியப்பன் தனது BS IV வாகனத்தின் பெயர் மாற்றத்திற்கு RTO -விடமே அவரது புரோக்கர் யுவராஜ் மூலம் நேரிடையாக கொடுத்த போதும், ஆவணங்களை எல்லாம் புரட்டி பார்த்த RTO, பார்த்தவுடனே, தேவைக்குரிய மேற்படி ஆவணங்கள் இல்லையே என கேட்டிருந்தால், இதனுள் ஒளிந்திருக்கும் பிரச்சனைகளை மாரியப்பன் அறிந்து, பெயர் மாற்றத்திற்கு முன்பே உரியவரிடம் வாகனத்தை ஒப்படைத்து பணத்தை திரும்ப பெற்றிருப்பார்.

இன்று அவருக்கு இப்படியொரு இழப்புகளும், மன உளைச்சல்களும் ஏற்பட்டிருக்க வழி "வலி" களும் இல்லாமல் போயிருக்கும்.

இந்த வழக்கமான நடைமுறைகள் எல்லாம், இந்த BS IV வாகன பதிவின்போது மட்டும் இந்த போக்குவரத்து அதிகாரிகளால் ஏன் கவனிக்கப்படவில்லை. என்ற கேள்விகள் எழுகிற பட்சத்தில், RTO வினாயகத்தின் லஞ்சலாவண்யம் மட்டுமே காரணம் என்பதிலும் பட்டென பதில் கிடைத்துவிடுகிறது.

மேலும்,இது தனக்கு தெரியாமல் நடந்து விட்டது என, எந்தவிதத்திலும் RTO வினயாகம் சொல்வது ஏற்பதற்கில்லை என்றாலும், அவரது ரெகுலர் பணிகளுக்குரிய ஆவணங்களை பெறாமலும், உரிய ஆவணங்கள் இல்லை என்பதை அறிந்து, அதற்கான முன் வாகன பதிவின் ஜாதகத்தை (தாய் ஆவணங்கள்) ஆய்வுக்கு எடுக்காமல், RTO வினாயகத்தால் ஒரு RC மாற்றப்படுகிறது என்றால், இந்த முறைகேடுகளுக்கு RTO வினாயகம் மட்டுமே முதல் குற்றவாளியாக ஆவார்.

மேலும், அந்த வாகனத்தின் பெயர் மாற்றத்திற்கான RC -க்குரிய ஆய்வில் அப்ரூவல் செய்ததிலும், அதனை ஆய்வு (VERIFICATION ) பண்ணியதற்கான வகையிலும் RTO வினயாகமே கையெழுத்து போட்டிருப்பதோடு, அந்த வாகனத்தின் பெயர் மாற்றத்திற்காக முறையான வழியில் உரியமனு பெறப்படவில்லை என்பதை ஆணையர் உடனடி ஆய்வையும், அலுவலக பணியாளர்களிடம் தனித்தனியாக முறையான ஆய்வை மேற்கொண்டால் RTO உடனடியாகவே பணியிடை நீக்கம் செய்யப்படுவார் எனபதும் உறுதியாகும்.

மேலும், ஸ்ரீராம் ஆட்டோ மால் நிறுவனத்தினரால் "சீஸ்" செய்யப்பட்டு ஏலத்திற்கான வாகன வரிசையில் நிறுத்தி, அங்கிருந்து விலை கொடுத்து வாங்கப்பட்ட நிறுவனத்தில் இருந்து, எப்படி ஒரு NOC கொடுக்கப்படாமல், நீங்கள் நேரிடையாக தூத்துக்குடி RTO அலுவலகத்திற்கு செல்லுங்கள், உங்கள் பெயருக்கு அங்கு TO ஆகிவிடும் என RTO -வினாயகத்தின் பணிக்குரிய அதிகாரங்களை ஸ்ரீராம் நிறுவனத்தின் ஜெயசங்கரால் அதிகார தோரணையில் கூறப்படுகிறது.

என்றால், RTO வினாயகத்திற்கும், இந்த ஜெயசங்கருக்கும் எந்த வகையில் ஊழல் தொடர்புகள் இருந்துள்ளது என்பதை, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கும், குற்றப்பிரிவு போலிசாருக்கும் இனி நாம் விளக்கி சொல்லத் தேவையில்லை என நம்புகிறோம்.

ஏனெனில் இந்த ஸ்ரீராம் நிறுவனத்தின் NOC இல்லாமலே RTO வினாயகத்தால் மாரியப்பன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டதும்,அதே போல் Form 35, மற்றும் Financial cancel certificate என எதையுமே உரிய ஆய்வு செய்யாமல் RTO வினாயகத்தால் பெயர் மாற்றம் செய்யப்பட்டு மாரியப்பன் பெயருக்கு RC வழங்கப்பட்டுள்ளது , என்றால் இந்த கோடிக்கணக்கான ஊழலில் இந்த RTO க்கும் பங்களிப்பு உள்ளது என்பது உறுதியாகவே புலப்படுகிறது.

மேலும் RTO வினாயகத்திற்க்குரிய பணியை RTO சரியாக செய்திருந்தால், இந்த மாரியப்பனின் TO விலே, இந்த முறைகேடுகள் முதலிலே தவிர்க்கப்பட்டிருக்கும். அதேநேரத்தில் இந்த முறைகேடுகள் ஒரு போலி சங்கத்தின் கட்டப்பஞ்சாயத்துக்குள் ( ! ) சிக்கி வெளியாக வேண்டிய நிலைக்கும் வந்திருக்காமல் அனைத்து முறைகேடுகளையும் எப்போதோ RTO வினாயகத்தால் கண்டு பிடித்திருக்க முடியும்.

ஆனால் இதனை அவர் கண்டுகொள்ளாமல் போனதற்கு காரணமும், இந்த கோடிக்கணக்கான ஊழலில் RTO வினாயகத்தின் பங்களிப்பும் அதிகமாக இருந்துள்ளது என்பது தெள்ள தெளிவாக தெரியவருகிறது.

எனவே தூத்துக்குடி RTO வினாயகத்தை சிறைப்பிடிக்க நடவடிக்கை எடுப்பதோடு,, மேற்கண்ட ஆவணங்கள் வினாயகத்தால் உரிய ஆய்வு செய்யப்படாமல், மாரியப்பன் பெயருக்கு RC மாற்றம் செய்யப்பட்டது எப்படி என அறிந்து, RTO வினாயகம் மீது குற்ற நடவடிக்கையும் துறைரீதியான கடும் நடவடிக்கைக்கும் நம்மால் பணிந்து கோரப்படுகிறது.

தற்போது நமது செய்தி வெளிவந்ததை தொடர்ந்து RTO வின் குற்றத்திற்கான தடயங்கள் அளிக்கப்படும் முன், உரியஆய்வுகளை மேற்கொள்வதும், அவரை உடனே விடுப்பில் அனுப்பி, அலுவலகத்திற்குள் அனுமதிக்காதபடி உரிய ஆய்வுகளை செய்து அதிரடிகளை அரசு எடுக்கும் பட்சத்தில், இது போன்ற ஊழல் அதிகாரிகளை வினாயகத்தால் நடத்தப்பட்ட பெரும் ஊழல்கள் மற்றும் BS IV-ல் நடந்த கோடி கோடி கோடிக்கணக்கான ஊழல்களில் வினாயகத்தின் பங்கும், இவரோடு இணைந்து செயல்பட்ட அதிகாரிகள் மற்றும் புரோக்கர்கள் யார் யார் என்றும் தெரியவரும்.

எனவே அரசு அதிரடி கண்டால் சரி. என்ன நடவடிக்கை பாய்கிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# VEHICLE HISTORY REPORT FOR REGISTRATION NUMBER : TN99J3464

**Owner Details**

| | | | |
|---|---|---|---|
| **Owner Name** | MARIAPPAN S | **Father's/Husband's Name** | SHUNMUGASUNDARAM |
| **Address** | 5/709/1, NETHAJI NAGAR 11TH STREET,THOOTHUKUDI,MELUR POST,Thoothukkudi,Tamil Nadu,628002 | | |

**Vehicle Details**

| | | | |
|---|---|---|---|
| **Registered With RTO:** | THOOTHUKUDI RTO, | **Vehicle Status** | ACTIVE |
| **Vehicle Class** | Motor Car | **Chasis No:** | MDHFBACDOGA321824 |
| **Horse Power** | 53.64 | **Color** | LIME GREEN 1 |
| **Engine No** | B4AA400E121223 | **Body Type** | HATCH BACK |
| **Maker Model** | AALN00820053 | **Fuel** | PETROL |
| **Seating Capacity** | 5 | **Standing Capacity** | 0 |
| **Unladen Weight (Kg.)** | 1058 | **Laden Weight (Kg.)** | 683 |

BlackList Details

| S.No. | Complain | Complain Date | Complain Entered By | Action Taken | Action Entered By | Action Date | Office | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | TN99J3464 | AS PER TC'S INSTRUCTION MAIN ON 29.09.22 | 29-Sep-2022 | LATHA M | | | | CHENNAI (SOUTH-WEST) RTO,TN |

Fees Collection Details

| S.No. | Receipt No | Receipt Date | Fee Amount | Fine | Fee Particular | Office |
|---|---|---|---|---|---|---|
| 1 | TN220121C4483661 | 21-Jan-2022 | 25 | 0 | Service/User Charge | THOOTHUKUDI RTO,TN |
| 2 | TN220121C4483661 | 21-Jan-2022 | 300 | 0 | Transfer of Ownership | THOOTHUKUDI RTO,TN |
| 3 | TN220121C4483661 | 21-Jan-2022 | 200 | 0 | Smart Card Fee | THOOTHUKUDI RTO,TN |
| 4 | TN88D21040001256 | 20-Apr-2021 | 25 | 0 | Service/User Charge | NAMAKKAL (SOUTH) RTO,TN |
| 5 | TN88D21040001256 | 20-Apr-2021 | 200 | 0 | Smart Card Fee | NAMAKKAL (SOUTH) RTO,TN |
| 6 | TN88D21040001256 | 20-Apr-2021 | 300 | 0 | Transfer of Ownership | NAMAKKAL (SOUTH) RTO,TN |

Insurance Details

| S.No. | Insurance Company | Insurance Type | Insurance From | Insurance Upto | Cover Note No | Office |
|---|---|---|---|---|---|---|
| 1 | NEW INDIA INSURANCE CO. | COMPREHENSIVE | 18-Mar-2020 | 17-Mar-2021 | F6778900000087765 | CHENNAI (SOUTH-WEST) RTO,TN |
| 2 | SHRIRAM GENERAL INSURANCE CO LTD | THIRD PARTY | 19-Apr-2021 | 18-Apr-2022 | 421014/31/22/000141 | CHENNAI (SOUTH-WEST) RTO,TN |
| 3 | SHRIRAM GENERAL INSURANCE CO LTD | THIRD PARTY | 19-Apr-2021 | 18-Apr-2022 | 421014/31/22/000141 | NAMAKKAL (SOUTH) RTO,TN |
| 4 | SHRIRAM GENERAL INSURANCE CO LTD | THIRD PARTY | 19-Apr-2021 | 18-Apr-2022 | 421014/31/22/000141 | NAMAKKAL (SOUTH) RTO,TN |
| 5 | SHRIRAM GENERAL INSURANCE CO LTD | THIRD PARTY | 19-Apr-2021 | 18-Apr-2022 | 421014/31/22/000141 | NAMAKKAL (SOUTH) RTO,TN |
| 6 | SHRIRAM GENERAL INSURANCE CO LTD | THIRD PARTY | 19-Apr-2021 | 18-Apr-2022 | 421014/31/22/000141 | NAMAKKAL (SOUTH) RTO,TN |
| 7 | SHRIRAM GENERAL INSURANCE CO LTD | THIRD PARTY | 19-Apr-2021 | 18-Apr-2022 | 421014/31/22/000141 | NAMAKKAL (SOUTH) RTO,TN |
| 8 | SHRIRAM GENERAL INSURANCE CO LTD | THIRD PARTY | 19-Apr-2021 | 18-Apr-2022 | 421014/31/22/000141 | NAMAKKAL (SOUTH) RTO,TN |
| 9 | SHRIRAM GENERAL INSURANCE CO LTD | THIRD PARTY | 19-Apr-2021 | 18-Apr-2022 | 421014/31/22/000141 | THOOTHUKUDI RTO,TN |

Owner Details

| S.No. | Registration No | Owner Name | Father Name | Address | Status | Moved On | Moved By | Office Name |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | TN99J3464 | CHANDRASEKARAN S | SAMIDURAI | NO3 AMMANKOIL STREET,SALIGRAMAM,,Chennai,Tamil Nadu,600093 | ACTIVE | 20-Apr-2021 | K.THIYAGARAJAN | CHENNAI (SOUTH-WEST) RTO |
| 2 | TN99J3464 | ARUN R | RAJENDRAN | 1/99,RAJAVEETHI,VELAIYAPPATTI POST,NAMAKKAL,Namakkal ,Tamil Nadu,637020 | ACTIVE | 14-Feb-2022 | VINAYAGAM S | NAMAKKAL (SOUTH) RTO |

| S.No. | Registration No | Owner Name | Father Name | Address | Status | Moved On | Moved By | Office Name |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | TN99J3464 | MARIAPPAN S | SHUNMUGASUNDARAM | 5/709/1, NETHAJI NAGAR 11TH STREET,THOOTHUKUDI,MELUR POST,Thoothukkudi,Tamil Nadu,628002 | ACTIVE | | | THOOTHUKUDI RTO |

Tax Details

| S.No. | Receipt No | Tax From | Tax Upto | Tax Type | Challan Date | Tax Amount | Fine / Penalty | Office |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | IP3567643 | 17-Jan-2018 | 16-Jan-2033 | MV Tax | 17-Jan-2018 | 37619 | 0 | CHENNAI (SOUTH-WEST) RTO,TN |

TRANSFER OF OWNERSHIP DETAILS

| S.No. | Application No. | Ownership Serial | Owner From | Owner Upto | Owner Name | Father / Husband Name | Present Address | Permanent Address | Owner Type | Sale / Auction Date | Sale Amount | Reason | Office |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | TN220121V3665566 | 2 | 21-Apr-2021 | 14-Feb-2022 | ARUN R | RAJENDRAN | 1/99,RAJAVEETHI | 1/99,RAJAVEETHI | 7 | 21-Jan-2022 | 376187 | Sale | NAMAKKAL (SOUTH) RTO,TN |
| 2 | TN21042067773989 | 1 | 17-Jan-2018 | 20-Apr-2021 | CHANDRASEKARAN S | SAMIDURAI | NO3 AMMANKOIL STREET | NO3 AMMANKOIL STREET | 6 | 20-Apr-2021 | 50000 | Sale | CHENNAI (SOUTH-WEST) RTO,TN |

**Government of Tamil Nadu**
**Certificate of Registration**

Reg. No.
TN99J3464

Date of Reg.
17-01-2018

Chassis No.
MDHFBACDOGA321824

Reg. Valid Till
16-01-2033

Engine No.
B4AA400E121223

Owner Sr. No.
03

Owner Name
MARIAPPAN S

TO

Fuel Used
PETROL

Son/Daughter/Wife of
SHUNMUGASUNDARAM

Address
5/709/1, NETHAJI NAGAR
11TH STREET THOOTHUKUDI
MELUR POST Thoothukkudi TN 628002

---

TNN07376832

Vehicle Class
Motor Car

TN NT

Reg. No.
TN99J3464

Maker's Name
NISSAN MOTOR INDIA PVT LTD

Month & Yr. of Mfg.
01/2018

Model Name
DATSUN REDI GO S

Wheel Base (mm)
002348

Colour
LIME GREEN 1

Cubic Capacity (cc)
000799

Body Type
HATCH BACK

No. of Cylinders
03

Seating/Standing Capacity
005 / 00

Financer Name

Form 23 A

Laden/ Unladen Weight (Kgs)
001058 / 000683

Tax Paid Upto
LIFE TIME

Signature of Issuing Authority
TN69 TUTICORIN RTO



# Shriram Automall India Ltd

Date: 18/01/2022

Address: MARIAPPAN S
5/709/1,NETHAJI NAGAR
Tuticorin-628002

MobileNo: 9003930702

**Sir/Madam,**

We are pleased to inform you that your offer is accepted by the seller/seller's and declared you as winner. The details of assets are given below.

Ref No: N22011800032-TN99J3464

| S.NO | Particulars | Amount |
|---|---|---|
| 1 | TN99J3464 | 230000.00 |

RSD will be refunded only on full payment is been made to seller.

Asset Details

| S.No | Reg No | Make | Model | MakeYear | SellerName | Amount Payable To Seller |
|---|---|---|---|---|---|---|
| 1 | TN99J346 4 | DATSUN | Redigo | 2018 | BATHISHKUMAR A | 230000.00 |

*Note: Buyer premium on sale Rs4600.00 and GST on buyers premium @ 18.00% Rs. 828.00 total of Rs.5428.00 is payable to us.

For SHRIRAM AUTOMALL INDIA LTD

Authorized signatory

**Please collect seller details and mode of payment before leaving from office.

-

*T&C apply

a00412

System Generated

18/01/2022

# BACKLOG REGISTRATION REPORT(TAMIL NADU)

## REGISTERING AUTHORITY(CHENNAI (SOUTH-WEST) RTO)

**(DATE FROM :01-08-2018 TO: 28-09-2022)** **(Total Rows : 3147)**

| Total Number of Rows - | | | 3147 | | | |
|---|---|---|---|---|---|---|
| **S. No** | **RTO Name** | **Registration No** | **Chasis No** | **Owner Name** | **Vehicle Class** | **Operation Date** |
| 1 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J6965 | MEXC19603KT0 81137 | PRASANTH R | Motor Car | 16-11-2021 |
| 2 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J7379 | MBHCZCO3SJF2 06687 | ARUN R | Motor Car | 12-02-2021 |
| 3 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J7469 | MA3ELEB1S093 90129 | AABHARANA A | Motor Car | 05-05-2022 |
| 4 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J7595 | MEEJSRGWBH7 000829 | SARABAGAM A | Motor Car | 22-03-2021 |
| 5 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J7649 | MA3FJEB1S0096 9889 | ARUNKUMAR P | Motor Car | 19-04-2021 |
| 6 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J7829 | MA3NYEB1SKA 493081 | SATHIYAMURT HI R | Motor Car | 27-08-2021 |
| 7 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J8387 | MA3ERLF1SOO6 33023 | KUMAR P | Motor Car | 12-02-2021 |
| 8 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J8558 | MBJGB8EM3020 627950618 | RAVICHANDRA N | Motor Car | 22-03-2021 |
| 9 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J8729 | MALC38ICMJM5 06216 | GUNASEKARAN S | Motor Car | 19-04-2021 |



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J9647 | MA3FXEB1S002 46027 | BAGIYALAKSHI MI S | Motor Car | 02-06-2022 |
| 11 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J9899 | MEEHSRAWEJ6 023554 | SAKTHIVEL S | Motor Car | 02-03-2022 |
| 12 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J9989 | MA3FJEB1S0072 2354 | ABINAYA R | Motor Car | 29-07-2022 |
| 13 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99Q5156 | MAT626282KKA O8843 | KARTHIK K | Motor Car | 01-09-2022 |
| 14 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99Q5489 | MAIYA2JJKG2B 20364 | SATHIYAMURT HI R | Motor Car | 17-11-2021 |
| 15 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99Q5759 | MALBM51RLK M737268 | NIVAS KANNAN J | Motor Car | 09-09-2022 |
| 16 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99Q7379 | MALC84IDLHM 013110H | SAREESHRAVI P | Motor Car | 02-09-2022 |
| 17 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99Q7478 | MEEHSRAW5F2 081703 | ARULKUMAR R | Motor Car | 11-08-2022 |
| 18 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99Q8369 | MALA851CLJM8 89693 | APARANAPARK AVI K | Motor Car | 30-08-2022 |
| 19 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99Q9359 | MDHFBACD0JA 839010 | SURESH K | Motor Car | 29-07-2022 |
| 20 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J1349 | MAKDF65BDK4 100043 | RAMRAJ R | Motor Car | 12-01-2022 |
| 21 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J1619 | MA3FLEB1S0054 3938* | RAMACHANDR AN K | Motor Car | 11-04-2022 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 22 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J1979 | MEXE1960XKT087087* | ESAKKIRAJA C | Motor Car | 27-04-2022 |
| 23 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J2123 | MBHCZCO3SJA103293 | BALAKRISHNA N R | Motor Car | 09-02-2021 |
| 24 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J2348 | MBJCGB8EM7020191890317 | SIVAKUMAR T | Motor Car | 05-04-2021 |
| 25 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J2366 | MA1NA2VZXJ6A37807 | VENKATRAJ E | Motor Car | 29-03-2021 |
| 26 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J2528 | MBJGA3GS400372997 | VICKY M | Motor Car | 24-03-2021 |
| 27 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J2636 | MEEJSRGWBK1002197 | PAVITHRA R | Motor Car | 06-05-2022 |
| 28 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J2654 | MBJCB8FM0020558551118 | KARTHIK N | Motor Car | 20-04-2021 |
| 29 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J2735 | MA3FJEB1S00B56409 | SEETHALAKSHMI P | Motor Car | 30-07-2021 |
| 30 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J2789 | MDHFBACDOJ5830523 | SUKANA J | Motor Car | 02-03-2022 |
| 31 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J2816 | MBJB49BT6001804250718 | SUDALAIMANI K | Motor Car | 23-08-2022 |
| 32 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J2879 | MA3NYEB1SKM611097 | SIVAGANAM M | Motor Car | 29-03-2021 |
| 33 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J2987 | MBJCGB8EM3020627850418 | N KARTHIK | Motor Car | 15-03-2021 |
| 34 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J3248 | MA1PT2MLXJ2GI8928 | ILAYARAJ P | Motor Car | 30-03-2021 |
| 35 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J3284 | MA3FJEBIS00959778 | RAJESHKUMAR A | Motor Car | 20-04-2021 |
| 36 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J3374 | MA1PT2MLXJ2B22716 | VASANTHAKUMAR R | Motor Car | 09-12-2021 |
| 37 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J3428 | MBJJBSFM1025337930118 | SIVAGANAM M | Motor Car | 22-06-2021 |
| 38 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J3464 | MDHFBACDOGA321824 | CHANDRASEKARAN S | Motor Car | 22-03-2021 |
| 39 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J3536 | MA1SL4BUNJ2E76935 | RAVI B | Motor Car | 17-03-2021 |
| 40 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J3653 | MA3ELEB1S00541223 | SIVAGANAM M | Motor Car | 29-04-2021 |
| 41 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J3779 | MBHCZC63SKD397825* | MAHENDRAN M | Motor Car | 12-08-2022 |
| 42 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J4265 | MA1YU2HHUH6J12012 | RAMA R | Motor Car | 30-07-2021 |
| 43 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J4364 | MA3NYEB1SKC525832 | ARAVIND A | Motor Car | 11-08-2021 |
| 44 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J4679 | MBJCGB8EM7020191830318 | VELAYUTHAM K | Motor Car | 15-03-2021 |
| 45 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J5237 | MA3EXGL1S00358613 | KIRANKUMAR Y S | Motor Car | 09-08-2021 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 46 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J5354 | MA3BNC52SKHI 83284 | KUMAR P | Motor Car | 22-03-2021 |
| 47 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J5363 | MALC841DLJM0 68949E | LOGANATHAN R | Motor Car | 17-06-2022 |
| 48 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J5768 | MAIXL2WJXJ5A 56705 | MOHANRAJ S | Motor Car | 22-06-2021 |
| 49 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J6263 | MALBM51BLLM 820832* | NARESH M | Motor Car | 26-11-2021 |
| 50 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J6398 | MDHFCUK13H6 800243 | PRASANNA N | Motor Car | 28-04-2021 |
| 51 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J6569 | MA3FLEB180054 5793 | ARAVINDASAM Y R | Motor Car | 09-02-2021 |
| 52 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J6758 | MBJAA3G200387 7140418 | RAMKUMAR S | Motor Car | 21-04-2021 |
| 53 | CHENNAI (SOUTH-WEST) RTO | TN99J6875 | MEXA17607HT1 17481 | VIJAYALAKSH MI P | Motor Car | 11-07-2022 |

🙏🙏🙏 ஏலத்திற்க்கான வாகன விபரங்கள் 👆👆👆

**திருநெல்வேலி ஸ்ரீராம் ஆட்டோமாலில்** 08-10-2022 அன்று **நேரடி ஏலத்தில் வாகனங்கள்** உள்ளது. ஏலத்தில் கலந்து கொண்டு வாகனத்தை எடுத்து பயன்பெறலாம்.

☎️தொடர்புக்கு :
**T.ஜெயசங்கர்**
9790648113

**இடம்:**
ஸ்ரீராம் ஆட்டோமால்,
நாகர்கோவில் மெயின் ரோடு,
பொன்னாகுடி,
திருநெல்வேலி.

**நுழைவு கட்டணம்: நபர் ஒருவருக்கு ரூ 20120**
**நேரம்: காலை 10.30**

***விலை ஏலத்தில் மட்டுமே தெரிவிக்கப்படும்***

6:34 PM

| Tirunelveli Auction Date : 08-10-2022 | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| Sl No | Mfg.Year | Mfg.Name | Model | Segment | Tax | Permit | Fc | Insurance |
| 1 | 2014 | Toyota | Etios Liva 4x2 Aut | Car | 04-Jul-29 | T-Board | 04-Apr-20 | |
| 2 | 2020 | Toyota | Glanza 4x2 Aut | Car | Life tax | Own Board | 05-Feb-35 | |
| 3 | 2010 | Tata | Indica Vista 4x2 Aut | Car | Life tax | Own Board | 03-Jun-25 | |
| 4 | 2016 | Tata | Indigo 4x2 Aut | Car | Life tax | Surrender | 13-Nov-20 | |
| 5 | 2018 | Tata | Tiago 4x2 Aut | Car | Life tax | Own Board | 11-Jul-33 | |
| 6 | 2016 | Maruti | Swift Dzire Tour 4x2 Aut | Car | 06-Jul-32 | Own Board | 06-Feb-32 | |
| 7 | 2007 | Maruti | Wagon R 4x2 Aut | Car | Life tax | Own Board | 02-Sep-22 | 19-Sep-23 |
| 8 | 2010 | Mahindra | Logan 4x2 Aut | Car | 06-Jun-25 | Own Board | 06-Jun-25 | |
| 9 | 2011 | Mahindra | Verito 4x2 Aut | Car | Life tax | Own Board | 06-Oct-26 | |
| 10 | 2015 | Hyundai | Eon 4x2 Aut | Car | Life tax | Own Board | 20-Aug-30 | 01-Nov-22 |
| 11 | 2015 | Hyundai | I20 4x2 Aut | Car | Life tax | Own Board | 17-Jun-30 | |
| 12 | 2011 | Hyundai | I20 4x2 Aut | Car | Life tax | Own Board | 29-Mar-26 | |
| 13 | 2015 | Ford | Fiesta 4x2 Aut | Car | 03-Feb-30 | Own Board | 03-Feb-30 | |
| 14 | 2012 | Ford | Fiesta 4x2 Aut | Car | Life tax | Own Board | 16-Oct-27 | 23-Mar-23 |
| 15 | 2008 | Chevrolet | Spark 4x2 Aut | Car | Life tax | Own Board | 28-Sep-23 | |
| 16 | 2018 | Toyota | Innova Crysta 4x2 Muv | Muv | Life tax | Own Board | 19-Feb-34 | |
| 17 | 2011 | Toyota | Fortuner 4x4 Muv | Muv | Life tax | Own Board | 07-Nov-26 | 26-Feb-23 |
| 18 | 2003 | Bajaj | Crusier 4x2 Muv | Muv | 11-Sep-23 | Own Board | 16-Jul-18 | |
| 19 | 1998 | Tata | Sumo 4x2 Muv | Muv | 31-Mar-24 | Own Board | 07-Apr-24 | |
| 20 | 2009 | Tata | Sumo Spacio 4x2 Muv | Muv | 30-Jun-24 | Own Board | 03-Jun-24 | |
| 21 | 2011 | Tata | Sumo Victa 4x2 Muv | Muv | 31-Mar-27 | Own Board | 16-Mar-26 | |
| 22 | 2013 | Tata | Sumo Gold 4x2 Muv | Muv | 30-Jun-18 | T-Board | 15-Oct-22 | |
| 23 | 2015 | Renault | Lodgy 4x2 Muv | Muv | Life tax | T-Board | 25-Sep-24 | 13-Jan-23 |
| 24 | 1975 | Mahindra | Jeep 4x2 Muv | Muv | 31-Mar-16 | Own Board | 07-Oct-26 | |
| 25 | 2012 | Mahindra | Xuv 500 4x2 Muv | Muv | Life tax | Own Board | 20-Sep-27 | |
| 26 | 2014 | Mahindra | Xylo 4x2 Muv | Muv | 30-Sep-22 | Surrender | 05-May-20 | |
| 27 | 2011 | Mahindra | Xylo 4x2 Muv | Muv | 31-Dec-19 | T-Board | 17-Feb-20 | |
| 28 | 2009 | Mahindra | Xylo 4x2 Muv | Muv | 23-Mar-24 | Own Board | 23-Mar-24 | |
| 29 | 2015 | Hyundai | Creta 4x2 Suv | Suv | Life tax | Own Board | 03-Jan-31 | |
| 30 | 2013 | Ford | Ecosports 4x2 Suv | Suv | 24-Apr-28 | Own Board | 24-Feb-28 | |
| 31 | 2015 | Chevrolet | Enjoy 4x2 Muv | Muv | 30-Sep-19 | T-Board | 11-Jul-20 | |
| 32 | 2010 | Chevrolet | Tavera 4x2 Muv | Muv | 31-Dec-25 | Surrender | 26-Sep-22 | 21-Jan-23 |
| 33 | 2020 | Maruti | Eeco 4x2 Minibus | Minibus | Life tax | Own Board | 05-Jan-36 | |
| 34 | 2014 | Hero | Karizma Two Wheeler | Two Wheeler | Life tax | | 27-Aug-29 | |
| 35 | 2020 | Bajaj | Maxima 3Wheeler Passenger Auto | 3 Wheel Pass Auto | 31-Aug-25 | Surrender | 12-Oct-22 | 28-Apr-23 |
| 36 | 2020 | Piaggio | Ape 3 Wheeler Passenger Auto | 3 Wheel Pass Auto | 30-Sep-25 | T-Board | 27-Oct-22 | |
| 37 | 2018 | Piaggio | Ape 3Wheeler Passenger Auto | 3 Wheel Pass Auto | 29-Feb-24 | T-Board | 07-Mar-21 | 13-Jul-23 |
| 38 | 2016 | Piaggio | Ape City 3Wheeler Passenger Auto | 3 Wheel Pass Auto | 07-Jul-21 | T-Board | 03-Sep-16 | |
| 39 | 2017 | Tvs | King 3 Wheeler Passenger Auto | 3 Wheel Pass Auto | 14-Jun-22 | T-Board | 14-Jun-19 | |
| 40 | 2018 | Bajaj | Maxima 3Wheeler Pickup | 3 Wheel Pickup | Life tax | Surrender | 06-Jul-22 | |
| 41 | 2017 | Bajaj | Maxima 3Wheeler Pickup | 3 Wheel Pickup | Life tax | Surrender | 03-Nov-21 | 21-Sep-23 |
| 42 | 2014 | Tata | Ace Facelift 4x2 Tipper | Tipper | Life tax | Surrender | 28-Mar-23 | 29-Jul-23 |
| 43 | 2021 | Maruti | Super Carry 4x2 Pickup | Pickup | Life tax | Surrender | 28-Sep-23 | |
| 44 | 2019 | Mahindra | Bolero City 4x2 Pickup | Pickup | Life tax | Not Surrender | 15-Dec-21 | 17-Jan-23 |
| 45 | 2017 | Mahindra | Bolero Camber 4x4 Pickup | Pickup | Life tax | Not Surrender | 15-Oct-22 | |
| 46 | 2020 | Ashok Leyland | Dost Plus 4x2 Pickup | Pickup | Life tax | Not Surrender | 12-Aug-22 | |
| 47 | 2018 | Ashok Leyland | Dost 4x2 Pickup | Pickup | Life tax | Not Surrender | 25-May-24 | 31-May-23 |
| 48 | 2017 | Ashok Leyland | Dost 4x2 Tipper | Tipper | Life tax | Surrender | 11-Nov-22 | 20-Apr-23 |
| 49 | 2017 | Ashok Leyland | Dost 4x2 Pickup | Pickup | Life tax | Not Surrender | 29-Dec-23 | 22-Feb-23 |
| 50 | 2012 | Ashok Leyland | Dost 4x2 Pickup | Pickup | Life tax | Not Surrender | 24-Apr-23 | 16-Mar-23 |
| 51 | 2007 | Ashok leyland | 2214 6x2 Cargo truck | Hcv Cargo truck | 30-Jun-22 | Surrender | 21-Mar-19 | |
| 52 | 2007 | Eicher | 10.90 Cargo truck | Lcv Cargo truck | 31-Mar-22 | Surrender | 31-Jan-22 | 20-Nov-22 |
| 53 | 2018 | Tata | 909 4x2 Closed Body | Lcv Cargo truck | 31-Mar-21 | Not Surrender | 28-Jan-23 | 20-Feb-23 |
| 54 | 2007 | Ashok Leyland | 1613 4x2 Tipper | Tipper | 30-Sep-22 | Surrender | 30-Sep-22 | |
| 55 | 2016 | Tata | 407 4x2 Tipper | Tipper | 30-Sep-22 | Surrender | 29-Jun-24 | 21-Jun-23 |
| 56 | 2012 | Tata | 407 4x2 Tipper | Tipper | 31-Mar-23 | Not Surrender | 29-Mar-23 | 12-Jul-23 |
| 57 | 2010 | John Deere | 5310 Agriculture Harvester | Harvester | 31-Mar-22 | | 08-Mar-25 | 22-Aug-23 |
| 58 | 2011 | Newholland | 4710 Agriculture tractor | Agriculture tractor | 08-Apr-13 | | 08-Apr-27 | |
| 59 | 2017 | New Holland | 5500 Agriculture tractor | Agriculture tractor | 10-Jun-19 | | 10-Jun-33 | |
| 60 | 2010 | L&T Komatsu | PC130 Hydraulic Excavator | Excavator | Not Applicable | | Not Applicable | |
| 61 | 2017 | Tata | Ace Mega XL 4x2 Pickup | Pickup | | | | |

## Vehicle Search

| | |
|---|---|
| Vehicle Number | TN99J3464 |
| Owner Name | *A*I*P*A* * |
| Registering Authority | THOOTHUKUDI RTO, Tamil Nadu |
| Vehicle Class | Motor Car(LMV) |
| Fuel Type | PETROL |
| Vehicle Age | 4 Years & 8 months |
| Vehicle Status | ACTIVE |
| Black list status | |


**Blacklisted by CHENNAI (SOUTH-WEST) RTO,Tamil Nadu due to reason Others, AS PER TC'S INSTRUCTION MAIN ON 29.09.22 dated 29-Sep-2022**

Tap to Check the Vehicle Impound & Seizure Document Status

| | |
|---|---|
| Registration Date | 17-Jan-2018 |
| Fitness Valid UpTo | 16-Jan-2033 |
| Tax Valid UpTo | LTT |
| Insurance Valid UpTo | 10-Mar-2023 |
| PUCC Valid UpTo | 18-Apr-2022 |

Create Virtual RC

View Challan



Registration No: TN99J3464


✔ Contact Details ✔ Insurance ✔ BLACKLISTED

wner Details | DSC History | Vehicle Details | Hypothecation/Insurance Information | Attached Trailer Details | SmartCard Details | Vehicle History Details | Tax Clearance Cer

ocuments Details | PUCC Details

History of Paid Fees

| Sr.No | Receipt No | Receipt Date | Fee Amount | Fine | Fee Particular | Office |
|---|---|---|---|---|---|---|
| 1. | TN220121C4483661 | 21-Jan-2022 12:53:08 PM | 25 | 0 | Service/User Charge | THOOTHUKUDI RTO |
| 2. | TN220121C4483661 | 21-Jan-2022 12:56:00 AM | 200 | 0 | Smart Card Fee | THOOTHUKUDI RTO |
| 3. | TN220121C4483661 | 21-Jan-2022 12:56:00 AM | 300 | 0 | Transfer of Ownership | THOOTHUKUDI RTO, |
| 4. | TN88D21040001256 | 20-Apr-2021 02:29:47 PM | 300 | 0 | Transfer of Ownership | NAMAKKAL (SOUTH) N |
| 5. | TN88D21040001256 | 20-Apr-2021 02:29:47 PM | 200 | 0 | Smart Card Fee | NAMAKKAL (SOUTH) N |
| 6. | TN88D21040001256 | 20-Apr-2021 02:29:47 PM | 25 | 0 | Service/User Charge | NAMAKKAL (SOUTH) N |



REGISTERED VEHICLE DETAILS

Registration No: TN99J3464

✔ Contact Details ✔ Insurance ✔ BLACKLISTED

r Details | DSC History | Vehicle Details | Hypothecation/Insurance Information | Attached Trailer Details | SmartCard Details | Vehicle History Details | Tax Clearance Ce

ments Details | PUCC Details

History of Blacklist

| Sr.No | Complain/File Number | Complain Date | Complain Entered By | Action Taken | Action Entered By | Action Date | Office |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | AS PER TC'S INSTRUCTI ON MAIN ON 29.09.22 | 29-Sep-2022 | LATHA M | | | | CHENNAI (SOU RTO,TN |